உ

கணபதி துணை.

# வேதாந்தம்.

இஃது
ஸ்ரீவன்றொண்டரவர்கள் மாணாக்கருளொருவராகிய
காரைக்குடி
ராம. சோ. சொக்கலிங்கச் செட்டியார் அவர்களால்
இயற்றப்பெற்று,

தேவிகோட்டை ஸ்ரீமான் அரு. அரு. சோம.
சோமசுந்தரச் செட்டியாரவர்களால்
காரைக்குடி
"ஞாணாம்பிகா" ப்ரிண்டிங் வொர்க்ஸில்,
அச்சிடப்பெற்றது.
பிங்கள-௵ மார்கழி-௴
1917.

கணபதிதுணை.

# வேதாந்தம்.

வேதாந்தம் என்பது, வேதசிரசு. வேதமுடி, உப நிஷதம், என்பனவாதி பெயர்களால் வழங்கப் பெறும். இவை வேதங்களின் முடிவாகியபொருள் கூறுவதாகும். இவ் வுபநிடதங்கள் நூற்றெட்டு, முப்பத்திரண்டு, பத்து முதலிய பகுதிகளா யுள்ளன. இவை யெல்லாம் மிகுதி யும் பதி பசு பாச நித்தியங் கூறுவனவேயாம். இப்பதி பசுபாசங்கள்பலபரியாயநாமங்களால் வழங்கப்பெறுவன. அவைகளை முன் பின் நோக்கி ஊகித்துண்மையுணர்வார் கள் புத்திமான்கள். சிலர், நாங்கள் வேதாந்திகளென்று சொல்லிக்கொண்டு, வேதாந்தமாகிய உபநிடதங்கள்,பதி பசு பாசங்களாகிய ஈசுவரன் சீவன்செகத்தெல்லாம் பொ ய்யே.பிரமம் ஒன்றேயுள்ளது, நாமே அப்பிரம மென்று

கூறுகின்றனவாகவே பிறர்க்குப் போதிக்கின்றார்கள். இக்கொள்கை உண்மையல்லவென்பதை, அந்த வேத வேதாந்தமூலமாக விளக்கிக் காட்டினால் அதனை எல்லாரும் ஒப்புக்கொள்ளுவார்களாதலால், அங்குள்ள பிரமாணங்கள் ஈண்டு எடுத்துக்காட்டப்படும். உள்ளிட்டுநோக்கி உண்மை தெளிக.

முதலாவதாகிய இருக்குவேதத்தில் (க-ம்) மண்டலத்து (கசுச-ம்) சூக்தத்து (உ0)ம் மந்திரம், இரண்டு அழகிய பக்ஷிகள் இஷ்டத்துடன் கூடிக்கொண்டு ஒரே விருக்ஷத்தில் வசிக்கின்றன. அவ்விரண்டுபக்ஷிகளில்ஒன்று, அந்த அரசமரத்தின் இனியபழத்தைப்புசிக்கின்றது மற்றொருபக்ஷியோ, அப்பழத்தைப்புசியாமற் பார்த்துக்கொண்டிருக்கிறது என்றுகூறுகின்றது. இதில் இரண்டு பக்ஷிகளென்றது, பரமான்வாகிய பதியையும், சீவான்மாவாகியபசுவையுமே.விருக்ஷமென்றது,சீவர்களுக்குக் கர்மானுகுணமாயுள்ள சரீரத்தையும், பழமென்றது சீவர்களது கர்மானுபவத்தையும், ஒருபக்ஷி புசிக்கின்றதென்றது, சீவர்கள் வினைப்பயன்களை யனுபவிக்தலையும், ஒரு

பக்ஷி புசிக்காது பார்த்துக்கொண்டிருக்கின்றதென்றது பரமான்மாவாகிய சிவன், அக்கர்மாதிமலத்திரயங்களைக் கடந்தவன்சர்வசாக்ஷியாய்ச் சர்வபரிபூரணனு யுள்ளவனென்பதையுமே குறித்துவிளக்குகின்றன. இதுபோலப்பதிபசு பாசங்களின் நித்தியங் கூறுகின்ற வேத வாக்கியங்கள் பற்பலவுள்ளன விரிப்பிற் பெருகும்.

இனி, மேற்கூறிய வாக்கியங்கள்குறிப்பாகத்தானே விளக்குகின்றனஎன்றால், அதனை விளக்கிக்கூறுகின்ற வசனம் பின்வருவன. ஒரேசரீரமாகிய விருக்ஷத்திலே, புருஷனாகிய சீவான்மா, சுதந்திரமின்மையால் மயங்கித் துக்கசாகரத்தில் முழுகிக்கிடக்கின்றான்; அவன் எப்போது பரமான்மாவாகிய ஈசனை அறிந்து அவரது மகிமைக்குணத்தை (அஷ்டமங்கள திவ்யகுணங்களை) அடைகின்றானே! அப்போது அத்துன்பநீங்கினவனாகின்றான் என்று முண்டகோபநிடதம் (ந, க, க,) மந்திரங்கூறுகின்றது. ஈண்டுக்காட்டிய இருக்குவேத முண்டகோபநிடத மந்திரங்களினாலே, பரமசிவனாகிய பதியும், சீவனாகியபசுவும், அவன்மயங்கிக்கிடத்தலால் அறிவைமறைக்கும் ஆ

ணவமலமும், அவனுக்குச்சரீராதிகளைக்கொடுத்தமாயா மலமும், அவன்பழத்தை உண்ணுதலாகிய கர்மானுபவத்தைக்கொடுத்த கர்மமலமுமாகிய மும்மல மென்கின்ற பாசமுமாகிய திரிபதார்த்தங்களுநம்என்றுமுள்ள அநாதி நித்தியங்களேயென்பதுதெளிவாயது. இதனை, ஏகாத்ம வாதிகளாகியமாயாவாதிகளு மேற்கொண்டு பாராட்டுகின்ற கைவல்லியமும்,

அச்சுவத்தமென் றொருமா மதிலிரண்டரும்பறவைகள்வாழும்
நச்சு மங்கொரு பறவையம்மரக்கனிநன் றுநன் றெனத்தின்னும்
மெச்சு மங்கொரு பறவை தின்றதெனவியங்கியப் பொருளாக
வைச்சு மாமறை சீவனை யீசனை வகுத்த வாறறி வாயே.

என்றுவிளக்குகின்றது.

இனி, "பின்மனிதன் சிவசாமிய முற்றுப் பிரமானந்தத்தைஅனுபவிக்கின்றான்." என்று கடவல்லியுபநிடதம். (௬, ௧௪) லும், "இதுதான் சீவர்களுக்கு உறைவிடம் இது சிவம்" என்று பிரசிநோபநிடதம்(௧, ௧0) லும் "உனக்கு ஆத்மாவாயுள்ளவர் அந்தரியாமியாகியசிவன்" என்று பிருகதாரணியோபநிடதம் (௫,௭,௩,௨௩) லும்"

அறிந்து சிவானந்தம் அனுபவிக்கின்றனன் "அறிந்து சி வானந்தமனுபவிக்கின்றனன்" என்றுபிரசினோபநிடதம் (௬, ௧௨) லும், "க்ஷரத்தையும் (பாசத்தையும்) (சீவ) ஆ ன்மாவையும், ஆளுபவர் ஏகராகியதேவர்." (சிவன்) என் று சுவேதாச்சுவதரம் (௧, ௧0) லும், "பரமும் அபரமு மாகிய, (சீவப்) பிரமம் (சீவான்மா) பரப்பிரமம்( பரமா ன்மா) என்னும் இரண்டும் அறியற்பாலன." என்று மை த்திராயணோபநிடதம் (௬, ௨௨) லும் "மகிழ் வுடைய னாய் (சீவான்மாவுக்கு) வேறாகியசிவபிரானையும், அவரது சர்வஞ்ஞதாரூபத்தையும், எப்போது பார்க்கின்றானோ அப்போது பாசத்துக்கம் நீங்கினோனவன், என்றுமுண் டகோபநிடதம் (௧, ௬, ௧௨) லும், சுவேதாச் சுவதரம்(௪ ௭) லும் சீவான்மாக்கள் பலவென்பது விளங்கச் "சர் வாத்மாக்களினும்" என்று சாந்தோக்கியோபநிடதம்(௫ ௧, ௧௮) லும் (சீவ) ஆன்மாவிலே பரம ஆன்மாவைப்பா ர்க்கின்றனன் என்று பிருகதாரணியம் (௬, ௪, ௨௩) லும் (சீவ) "ஆன்மாவில் இருப்பவராக அவரை (சிவபிரானை) எந்தப்பெரியோர் பார்க்கின்றாரோ அவர்களுக்கே ஆனந் தம். பிறர்க்கில்லை" என்று கடவல்லி (௫, ௧௩) லும் சு

வேதாச்சுவதரம் (சு, கஉ) லும் கூறுகின்றஉண்மைகளை உற்று நோக்குமிடத்துப் பதிபசு பாசங்கள் உள்பொருள்களென்றே பரிஷ்காரமாக விளங்குகின்றன. மேலும், கசத்தியத்தின் சத்தியம்'' என்றும், (சிவபிராணுகியபதிப்பொருள்) "நித்திய பதார்த்தங்களாகிய (பதிபசு பாசங்களுள்ளே) நித்தியர் "என்றும் சேதனபதார்த்தங்களாகிய (பதி விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் சேதனப்பொருள்களுள்ளே சேதனர் என்றும் "பிரதானம் ஆன்மா என்னுமிரண்டுக்கும் பதியாகிய குணங்களையுடையஈசரென்றும், இந்தப் பசுக்களைப்பதியாகிய (சிவபிரான்) ஆளுகிறுர் என்றும், பிருகதாரணியம் கடவல்லிசுவேதாச்சுவதரம் முதலிய உபநிடதங்கள் கூறுகின்றன. இங்ஙனமாகவும் இவைமூன்றும், (சீவன் ஈசுரன்செகம் மூன்றும்) அநித்தியங்களேயென்றும் பிரமம் ஒன்றேநித்தியமென்றும் நாமே அப்பிரமமென்றுங் கூறுகின்றவர்களை அகம் பிரமவாதிகள், ஏகாத்மவாதிகள், மாயாவாதிகளென்றுகூறுதல் பொருத்தமேயன்றிவேதாந்திகளென்பதுபொருந்துமா? வேதாந்தங்களாகிய உபநிடதங்கள் திரிபதார்த்தங்கள் உண்டென்றேகூற, நேர்விரோதமாக அவை யில்லை யென்பவர்கள் அவ்வேதாந்த

விரோதிகளேயன்றி வேதாந்திகளாகார்களென்பதுசொல்லவும் வேண்டுமா?

சீவன் ஈசுரன் செகத்தெல்லாம் (கற்பிதமே) பொய்யே என்றுஞ் சிலவேதாந்தங்கள்கூறுதலால் அவற்றை மேற்கொண்ட எங்களை வேதாந்திகளென்னத் தடையில்லை யென்பராகில், பொய்யென்றுகூறும் அவ்வேதாந்தங்களைத் திரிபதார்த்தநித்தியங்கூறும் வேதாந்தங்களுடன் வைத்து அவைகள் பொய்யென்று கூறுதற்குரியகாரணங்களை யுள்ளிட்டுநோக்குமிடத்து பொய்யென்பனவெல்லாம்பொய்பாயடங்க மெய்யென்பனவே மெய்யாய்நின்றுண்மைசாதிக்குமென்க.

இனிப், பிரம மொன்றொழிய மற்றெல்லாம் பொய்யென்றுகூறும் உபநிடதங்களேசரியெனக்கொண்டு அவற்றுடன்மெய்கூறும் உபநிடதங்களை இணக்கிப்பொருள்கொண்டுமற்றெல்லாம் பொய்யென்றேகொள்ளலாமெனின், சீவன்ஈசன் செகத்தெல்லாம்பொய்யென்றுகொள்ளுவோர், அதுபோலவே புண்ணிய பாவம்சுவர்க்க நரகம் பந்த மோக்ஷம் முதலிய எல்லாம் பொய்யே என்றுகொள்ளுதலால் சிவகைங்கரியாதிசெய்து கஷ்டப்படாமல் இ

ஷ்டப்படிக்கி வேண்டியவெல்லாம் உண்டுடுத்துப்போகா திகளை அனுபவித்துச்சுவேசுஷாவான்களாய்ச் சிவநியமா திவரம்புக்குளகப்படாமல் இகபோகசுகிகளாகவே வாழ த்தடையில்லையாதலால், அவ்வாறுகொள்ளுதல் அவ்வே கான்மவாதிகள் கருத்துக்கிணங்கப்பொருத்தமாயினும், அவ்வேகாத்மவாத மொன்றுதவிர மற்றெல்லாச்சமயிக ளும் நமக்குமேலொருபதியுண்டு(ஆண்டவனுண்டு)நாம் பசுக்களே(அடிமைகளே) அப்பதியை வழிபாடு செய்து அடையவேண்டியதே நமது கடமையெனக்கொண்டு நி ற்றலாலும் உலகெலாமுள்ள சிவமூர்த்தி தலந்தீர்த்தங்க ளெல்லாம் நித்தியர்களாகிய சீவர்கள் வழிபாடுசெய்துய் தற்கே, வேதவேதாந்த சிவாகமாதி சகலசாஸ்திர சம்ம தமாக,எத்தனையோ ஊழிகளுக்குமுன்னமே அங்கங்கே விளங்கிக்கொண்டிருத்தலாலும், இன்னோரன்ன பற்பல ஏதுக்களாலும், பதி பசு பாச நித்தியங் கூறுகின்ற வே தாந்தங்களே உண்மையென்பதுதான் எல்லார்க்குமொப் பமுடிந்த முடிவாதலால், அவைகளுக்கு இணங்கவே பொய் கூறும் வேதாந்தங்களை இணக்கி அடக்கிக்கொள் ளுவதே எல்லா வழிக்கும் பொருத்த மாகுமன்றி வே றில்லையென்க. எனவே மெய்கூறும் வேதாந்தங்களே மற்

மவற்றைத் தன்னுள் அடக்கிக் கொண்டு உத்தமவேதா
ந்தமென விளங்குதலால் அவற்றைமேற்கொண்ட சுத்தா
த்துவித சைவசீலர்களே வேதாந்திகளாவாரன்றி அதற்
கு விரோதமான ஏகாத்மவாதங் கொளினர் வேதாந்திக
ளாகா ரென்பதே துணிவாகும்.

இவ்வேதாந்தசார சுத்தாத்துவித சைவ சித்தாந்த
மே உண்மையென்று உலகோர் உணர்ந் துய்யத் திருவு
ளங்கொண்டருளிய திருமூலநாயனார் திருமந்திரம், "அன்
னமிரண்டுளவாற்றங் கரையினிற், றுன்னியிரண்டுந் துணை
பிரியாவன்னந், தன்னிலையன்னந் தனியொன்ற வொன்றக்
காற், பின்னை யடவன்னம் பேறணுகாதே" என்று கூறு
கின்றது. இதன்பொருள், சிவனுஞ் சீவனுமாகிய இரண்டு
அன்னங்கள் ஆற்றங்கரை அரசவிருக்ஷம்போலுஞ் சரீரத்
திலுள்ளன. அவ்விரண்டும் வியாபகவியாப்பியமாய்ச் சே
ர்ந்து துணைபிரியாமலிருப்பன. (இவ்வுண்மையுணராமல்
ஏகான்மவாதிகள் இரண்டில்லை) தனிநிலையாகத்தனித்த
ஒரேயன்னந்தான் உள்ளது என்றால் பின்னமாகியதனைக்
கொணர்ச்சுதந்தர அறிவில்லாத அவ்வன்னம், ஆன்மலாபமா
கியசிவானுபவப் பேற்றையடையாதே யென்பதாம். ஆக

வே, ஏகான்மவாதிகள் ஒரே அன்னமென்பது (பசு)சீவர்களாகிய தங்களையே என்பதும்; ஒருநாயகி தனக்குமேலாகிய ஒரு தலைவனைக் கொள்ளாவிட்டால், இன்பத்தை ஒருக்காலும்பெறாதவாறுபோல, அவர்கள் தாமும் தமக்குமேலொரு தலைவனுமாகிய இரண்டன்னங்களென்டென்று கொள்ளாமையால், ஆன்மலாபமாகிய பேரின்பத்தைஒருக்காலும் அடையமாட்டார்களென்பதும்தெளிவாய் விளங்குகின்றது. இன்னுமித்திருமந்திரம் "பதி பசு பாசமெனப் பகர்மூன்றிற், பதியினைப்போற்பசுபாசமநாதி, பதியினைச்சென்றணுகாபசுபாசம், பதியணுகிற் பசுபாச நில்லாவே." என்பது முதலிய திருமந்திரங்கள் பதிபசுபாசங்கள் அநாதிநித்தியங்களென்றுகூறுகின்றன. இவ்வுண்மையிங்ஙனமாகவும், பதிபசு பாசமாகிய ஈசுரன்சீவன் செகத்தெல்லாம்பொய்யென்றுகூறுவது வேதாந்தமென்றும் இதற்குச்சாதகமாகத்திருமந்திரமுங்கூறுகின்றதென்றுங் கூறுகின்றார்கள். அது. அக் திருமந்திரங்களின் உள்ளீடுகளை முன்பின் விரோதம்வாராதபடிஉற்றுநோக்காமையேபோலும். அம்மந்திரங்களுக்கு அவர்கள் மனம் போனபடி பொருள் கொள்ளினும்மேற்காட்டியன முதலியவைகளால் வெட்டவெளியாகப் பதி

பசுபாசநிக்கிரகங் கூறுகின்றதிருமந்திரங்களுக்குள்ளன
பொருள் கூறுவார்கள் அவைகளைப்பற்றிப்பொருள்கொ
ள்ள வல்லவர்களாலும் முடியாதென்க.

இத்திருமந்திரந் திருவாய்மலர்ந்தருளியவர் திருக்
கைலையிலுள்ள ஒருசிவயோகியார். இவர் பசுக்களுக்கிரங்
கித் தமது சரீரத்தை ஒரு காப்பில் வைத்து விட்டு அப்
பசுக்களை மேய்த்தமூலர்சரீரத்திற்புகுந்து பசுக்கள் துக்க
நீங்கிவீடுகளுக்குச் சென்றபின்பு தாம் காப்பில் வைத்த
சரீரத்திற் புகுதற்குவந்து பார்த்தபோது அச்சரீரங் கா
ணப்பெறாமல், அதற்குக் காரணம், தம்மால் சிவாகமப்
பொருளைப் பூமியிலுள்ளார்செவ்வே தெளிந்துய்யும்பொ
ருட்டுத் தமிழில் வெளியிடுவித்தற்காகவே திருவருளை
மறைத்து விட்டதாகத்தெளிந்து, அத்திருமூலர்சரீரியா
கியே திருவாவடுதுறையில் வீற்றிருந்தருளி (௩௲) வரு
ஷம் சிவயோகத்திலமர்ந்து ஒவ்வொருவருஷ யோகானு
பவமே ஒவ்வொரு திருவிருத்தமாகச் சிவாகமங்களிலு
ள்ள சிவஞான சிவயோகசிவகிரியை சிவசரியாதிகளையே
வைத்துப்பாடியருளினரென்று, இவர் திவ்ய சரித்திரத்
தை ஸ்ரீமந்நடேசப் பெருமான் ஸ்ரீ சேக்கிழார்வாயிலாக

வெளியிட்டருளினர். இப்படியே உபமந்நியபக்தவிலாசம் அகஸ்திய பக்தவிலாசம் சிவரகசியம் முதலியன கூறுகின்றன. இத்திவ்விய சரித்திரத்தையும் உற்றுநோக்கித், திருவருளாணைநெறிப்படி சிவாகமசம்மதமாகிய பதிபசுபாச நித்தியாநித்தியசத்காரியவாதசைவசித்தாந்தமெனக்கந்தெய்ப்பவேபூமியிலெழுந்தருளிய திருமூலர் சைவசித்தாந்தவிரோதமாகப், பதிபசுபாசங்களாகிய ஈசுரன் சீவன்செகத்தெல்லாம்பொய்யேபிரமமொன்றேமெய் நாமேஅப்பிரமமென்கின்ற ஏகான்மவாதிகள் கொள்கைக்குச் சாதகமாகக் கூறுவராவென்று முன்பின் பொருந்த ஊகித்து நோக்குவார்க் குண்மை தெளிவாமன்றோ?

இனி ஏகான்மவாதிகள், "வேதாந்தமில்லாத சித்தாந்தங்கண்டிலோர், ஏதாநாமன்னசைவநுபாயமே" என்னுந் திருமந்திரந் தங்களுக்குச் சாதகமென்று நினைக்கின்றனர் போலும்; நல்லது வேதாந்தமோ, ஆன்மாக்களாகிய பசுக்கள் தங்களையே பரப்பிரமமென மயங்கிக் கொண்டு சீவன் ஈசுரன் செகமெல்லாந் தங்களிடத்திற் கற்பிதமேயென்று காட்டித்தே சாதிக்கும் ஏகான்மவாதபரமான வேதாந்தமும், பரமசிவனைத் தாழ்வாகிய நாராயணனையே பரப்பிரமமெனக் கொள்கின்

று வைணவபரமான வேதாந்தமும், உள்ளபடி பரமசிவனையே பரப்பிரமமெனக்கொள்கின்ற சைவபரமான வேதாந்தமுமுதலாகப் பலவகைப் படும். பலர்க்கும் பரத்துவங் கூறுகின்ற வேதமும், உபக்கிரம உபசங்காராதிகளில் சிவனொருவனே தியேயன் மற்றையர் தியசிக்கப்படுவரென்றுதெளிவு கூறிவிளக்குதல் போல், இவ்வேதாந்தங்களுள்ளும் ஏகான்மவாதவைணவாதி வேதாந்தங்களிலுள்ள பொருந்தாமைகளை ஞாயவழியாக ஒதுக்கி அவற்றைச் சோபானமாக்கொண்டு அவற்றின் மேலாய்விளங்குவது, திரிபதார்த்தநித்திய முதலிய உண்மைகூறுகின்ற சைவவேதாந்தமேயாம். ஆகவே, மேல் "வேதாந்தமில்லாதசித்தாந்தங் கண்டுளோர்" என்றுகாட்டிய வேதாந்தம், அவர்கள் கருத்தின்படி ஏகான்மவாத பரமாகவே கொண்டாலும், அதைக்கீழுள்ளசோபானமுறையாகவேதழுவிமேற்சென்றசைவசித்தாந்திகளுக்கு அதனால்யாதொருவிரோதமுமில்லையென்க. இஃதொன்றைத் தமக்குச்சாதகமாக்கொண்டு சாதிக்குமிவர்கள்., அத்திருமந்திரம் (௩௬)ங்களில் சைவபரமேயாண்டுங் கூறுகின்றவைகளுக்கு யாதுகூறுவரோ! அவற்றிற்சில பின்வருவனகாண்க. "ஆண்டானடியரை வேண்டாது பேசினோர்

தாந்தாம்விழுவது தாழ்வாநரகமே” “சத்துமசத்துஞ்சத
சத்துந்தான்காட்டில்.’ வேதாந்தந்தெம்பதமேவும்பசு
வென்ப” “சித்தாந்தத்தேசீவன் முத்தி சித்திக்கலாற்
சித்தாந்தத்தேநிற்போர்முத்திசித்திக்கவர்” நாடில். பதி
யுடனற்பசுபாசமு, நீமாநித்தம், “ஆயபதிதானருட்சி
வலிங்கம், ஆயபசுவுமடலேறென நிற்கும், ஆயபலிபீட
மாகு நற்பாசமாம்.” பதியும் பசுவொடுபாசமுமேலைக், க
தியும் பசுபாசநீக்க முங்காட்டி, மதிதந்தவானந்தமாநந்
திகாணுந், துதிதந்து வைத்தான் சுத்தசைவத்திலே”
“ஆணவமாகும் விஞ்ஞானகலருக்குப், பேணியமாயை
பிரளயாகலராகும், ஆணவமாயைகன்மமூன்றுமே, காணு
ஞ்சகலர்க்குக்காட்டுமலங்களே.” “தத்துவமாறாறுந்தன்
மனுவேழ்கோடி, மெய்த்தகுவன்னமைம்பானென்று
மேதினி, ஒத்திருநூற்றிருபானென்கெண்பானென்று,
வைத்தபதங்களையோரைந்தும்வந்ததே.” என்பனவாதி
யாகஅனேகமுள்ளன. இவைகள், உண்மைவேதாந்தத்தெ
ளிவாகிய சுத்தாத்துவிதசைவசித்தாந்தமேவிளக்குகின்
றவேதசிவாகமாதிசிவாசாஸ்திரங்களிலுள்ள பதி பசுபா
ச நித்தியங்கள், சரியைகிரியையோக ஞானங்கள், சா
லோகாதிநாற்பாதங்கள், தாசமார்க்க சற்புத்திரமார்க்க

சகமார்க்க சன்மார்க்கங்கள், மந்ததர மந்த தீவிர தீவிர தரசத்திநிபாதங்கள், மந்திரம் புவனங் கலை வன்னம் பதம் தத்துவங்களாகிய ஷடத்துவாக்கள், வேதாந்த சித்தாந்த நாதாந்த போதாந்த யோகாந்த கலாந்தங்களாகிய ஷடந்தங்கள், சிவபூசை, குருபூசை, மாகேசுவரபூசை திருவடிப்பேறு, சிவஞானம், முத்திரைமுதலிய சைவ பரமாயுள்ளவைகளையெங்கெங்கும் விளக்குகின்றன. இவைகளில் யாதொன்றாவது ஏகான்மவாதபரமான நூல்களிலுண்டா? இவைமுதலியவைகளை உற்றுநோக்காமல் திருமந்திரம் தங்களுக்குச்சாதகமென்று ஏகான்மவாதிகள் கொள்வது, மற்றெல்லாம் பொய்யென்று வாதிக்கும்மாயாவாதிகளாகிய அவர்கள்கொள்கைக்கு முழுதும் விரோதமேயன்றி வேறில்லை. அங்ஙனமாயினும் அவர்கள் திருமந்திரத்தை விசுவசித்து மேற்கொண்டது, இனிநாளடைவிலேயாவது திருவருளால் அதனுண்மைமேற்கொண்டு சைவசித்தாந்த நெறியில்வருதற்குக்காரணமாதலின் அதுவுமொருபெரு நன்மையேயாகும்.

இனிக், கைவல்லியமும், "தன்னையுந்தனக்காதாரத் தலைவனையுங் கண்டானேல்" என்றுபதிபசுபாசநித்தியங்

கூறுகின்றன. இதற்குஉரைகூறினவரும் "தன்னை" என்பதற்கு (நித்திய பசுவாகிய) கூடஸ்தன் என்றும் "தலைவன்" என்பதற்கு (நித்தியபதியாகிய) பிரமம் என்றும் உண்மைவிளக்குகின்றார். இனிச்சீவரெல்லாம் அநாதிநித்தியர்களே யென்பதை அக் கைவல்லியமே "அநாதியாஞ் சீவரெல்லாம்" என்று கூறி விளக்குகின்றது. மேலும், அக்கைவல்லியம் "எக்குணங்களுமற்றோன் தானிமித்த காரணனுமீசன்" என்று வேதசிவாகம புராணேதிகாசாதி சகலசாஸ்திரங்களுங்கூறுகின்றபடி, பரமசிவனைச் செகத்துக்கு நிமித்தகாரணனென்றே கூற, ஏகாத்ம வாதிகள் பிரமத்தைச்செகந்தோன்றுதற்கு முதற்காரணமென்று கூறுகின்றார்கள். பிரமமாகியசித்துப் பொருளிலே செகத்தாகிய சடப்பொருள் தோன்றுமென்பது விரோதமல்லவா என்பார்க்கு, அப்பிரமத்தில் விவர்த்தமாகச் செகந்தோன்றும் அது பிராந்தியேயன்றி வாஸ்தவமல்ல என்று முன்சொன்னதற்கு முட்டுக்கொடுத்து அதுவும் பொய்யென்பதாக விளக்குகின்றார்கள் இந்த விவர்த்தவாத உபமானங்களிலுள்ள பழுதுகள் பல விரிப்பானேன்.

இனிப், "பகவற்கீதை" எண்ணிய வுலகமுழுமுலகுக் கீசனும் புண்ணியபாவமும்(அவற்றைச் செய்கின்றசீவர்

களும்), பொய் யென்றே கொள்ளுகிறவர்கள் "கடக்கரி தாயநரகமென்கின்றகடல்களில்வீழ்வேகடவார்" என்று கூறுகின்றது. வாசிட்டமும் "ஆப்ந்த வென்சிந்தை சீவ நாயகன் வசமாகைக்கே, யெய்ந்தது நிலையுங்கொள்ளாதிறைவனைப்பிரிந்தாள்போல்" என்றுசீவனுகியபசுவும்அப்பசுக்களுக்கு நாயகனுகிய பசுபதியும் நிலைகொள்ளாமைக்குவதுவாகியபாசமும் நித்தியப்பொருள்களென்றே விளக்கி அதற்குவமையாகநாயகனைப்பிரிந்த நாயகிபோலென்றதனுலும் தெளிவிக்கின்றது. இதற்குஉரைகாரரும் சீவனைக்கூடஸ்தனென்றும் நாயகனைப் பிரமமென்றுங் கூறி இரண்டும் நித்தியங்களென்று விளக்குகின்றார். "ஆவாவிப்போதுள்ளபடி யறியு மறிவிலெனைக் கண்டேன், ஓவாவிகற்ப மற்றுணர்வாயொளிருஞ் சீவனுருவிதுவோ" என்றும் அவ்வாசிட்டம் சீவன்நித்தியன் சைதன்னியன் என்பதைவிளக்குகின்றது. இன்னும் இம் மாயாவாதிகள் மேற்கொண்ட நூல்களில்இவ்வாறுபதிபசு பாசநித்தியங் கூறுவனபல வுள்ளன. விரிப்பிற் பெருகும். இவர்களுள்ளே ஒரு பகுதியாராகிய கோயிலூர் வாசிகள் எல்லாராலும் சிரமேற்கொள்ளப்பட்ட ஆண்டவரென்னும் முத்துராமலிங்க சுவாமிகளும், "நாம்பிரமமென்று சொல்லி

நண்ணி யுழலாதே." என்று தாமும் பாடிப் பிறர்க்கும் போதித்து வந்தனர். இவைகளில் ஒன்றையேனும் பொருட்படுத்தாமல், பிடித்ததே சாதிக்குங் கருத்தினராய்ச் சீவன் ஈசுரன் செகத்துக்களாகிய பதி பசு பாசங்களை அநித்தியங்களை (பொய்யே) என்றும், பிரமம் ஒன்று மாத்திரந்தான் நித்தியமென்றும், நாமே அப்பிரமமென்றும், இவைக்கும் சில உபநிடதங்கள் பிரமாணமென்றுங் கூறுகின்றார்கள். அவ்வுபநிடதங்களின் உள்ளீடுகள் மேற்காட்டினேம். அவற்றையும் உற்று நோக்காது பிடித்ததே சாதிப்பராயிற் பதிபசுபாசநித்தியங் கூறுகின்ற பற்பல உபநிடதங்கள் கைவல்யம் பகவற்கீதை வாசிட்டாதி நூல்களின் கதியென்னையோ? ஆனால் விவகாரத்தில் எல்லாம் மெய்மையே; பரமார்த்தத்தில் இல்லையென்பரேல், இல்லது உள்ளதாகாது, உள்ளது இல்லதாகாது, என்னும் ஞாயத்தானும்,

"முத்திதனின் மூன்று முதலுமொழியக்கேள்
சுத்தவனு போகத்தைத் துய்த்தலனு—மெத்தவே
யின்பங் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தன்மல
மன்புடனே கண்டுகொளப் பார்."

பொய்யாகவேகழிக்கின்ற அமங்கலவழி தம்மை யணுவளவுஞ்சாராமல், மெய்யென்றேகொள்ளுஞ்சத்காரியவாத மங்கலவழியே இறுகப்பற்றி, நின்று, அதனால் இம்மையிலே உத்தமகளத்திரபுத்திரமித்திரபந்து சகிதர்களாய்ச்சகலசம்பத்துடன்வாழ்ந்துமறுமை இன்பமும்பேரின்பமும் பெற்றுவாழும்படி ஸ்ரீகணேச ஸ்கந்தசாம்பபரமேசுர சரணாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

வேதாந்தம்
முற்றிற்று.

ஞானம்பிகா ப்ரின்டிங் வொர்க்ஸ் காரைக்குடி.